(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2024

**கணக்கீடு**
**Accounting**

**Two Hours**

**Gr. 13 (2024)**

**33 | T | I**

**அறிவுறுத்தல்கள்:-**
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையினை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
- எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

01) பின்வரும் கூற்றுக்களுள் எது நிறுவனமொன்றின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை மிகவும் சிறப்பாக விபரிக்கின்றது?
(1) நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்.
(2) முகாமையாளர்களின் பயன்பாட்டுக்காகத் தகவல்களை வழங்குதல்.
(3) குறித்த காலப் பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல்.
(4) அக்கறையுடைய தரப்பினர் தீர்மானமெடுப்பதற்கான நிதி மற்றும், நிதி சாராத் தகவல்களை வழங்குதல்.
(5) மூலதனத்தை வழங்கியவர்களுக்காகப் பொதுநோக்க நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

(………)

02) பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது நிறுவனம் ஒன்றின் நீண்ட காலக் கடன் ஒன்றின் ஒரு பகுதியை நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்தலுக்கான அடிப்படையை வழங்குகின்றது?
(1) அட்டுறு (2) தொடர்ந்து இயங்குதல் (3) மாறாத்தன்மை
(4) முன்னெச்சரிக்கை (5) இணைதல்

(………)

03) "ரதி" PLC ஒரு மோட்டார்வாகன வியாபாரக்கம்பனி ஆகும். 01-01-2024 இல் இக்கம்பனி ரூ 5000 000 பெறுமதியான மோட்டார் வாகனங்களைக் கடனுக்கு கொள்வனவு செய்து இவற்றுள் ரூ 1000 000 கிரயமான மோட்டார் வாகனமொன்று அலுவலக பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டன. இவற்றுக்கான வருடாந்த பெறுமானத் தேய்வு ரூ 200000 ஆகும். எஞ்சிய வாகங்களில் ரூ 1500 000 கிரயமான மோட்டார் வாகனமொன்று 31-03-2024 இல் ரூ 2000 000 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.
பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது அனைத்து கொடுக்கல் வாங்கல்களினதும் 31-03-2024 இல் உள்ளவாறான **தேறிய விளைவைப்** பிரதிபலிக்கின்றது?



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

| | நடைமுறையல்லாச் சொத்துக்கள் (ரூ 000) | + நடைமுறைச் சொத்துக்கள் (ரூ 000) | = பொறுப்புக்கள் (ரூ 000) | + உரிமையாண்மை (ரூ 000) |
|---|---|---|---|---|
| (1) | + 3500 | + 2000 | = + 5000 | + 500 |
| (2) | + 3325 | + 2000 | = + 5000 | + 325 |
| (3) | + 1000 | + 4500 | = + 5000 | + 500 |
| (4) | + 950 | + 4500 | = + 5000 | + 450 |
| (5) | + 800 | + 4500 | = + 5000 | + 300 |

(………)

❖ ***04 ஆம் 05 ஆம் 06 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.***

பெறுமதிசேர் வரிக்காகப் (VAT) பதிவு செய்யப்பட்ட கம்பனியான சுரேன் LTD ஆனது 10-03-2024 இல் "அனில் றேடேர்ஸ்"க்குக் கடனுக்கு ரூபா 690000 பொருட்களை விற்பனை செய்தது இவ் விலைப்பட்டியலின் பெறுமதியானது 15% பெறுமதி சேர் வரியை (VAT) உள்ளடக்கியுள்ளது குறைபாடு காரணமாக ரூ 138000 பட்டியல் விலைப் பெறுமதியுடைய பொருட்களை அனில் றேடேர்ஸ் திருப்பியனுப்பியது. 31-03-2024 இல் அனில் றேடேர்ஸ் சுரேன் LTD இற்கு செலுத்தவேண்டிய தொகையில் VAT நீங்கலான தொகைக்கு 10% கழிவினை பெற்று முழுத்தொகையினையும் தீர்ப்பதற்கு காசோலை ஒன்றை வழங்கியது. விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் ரூ 500000 ஆகும்.

04) மேலே குறிப்பிட்ட எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் அவை ஏற்பட்ட ஒழுங்கு வரிசைப்படி "அனில் றேடேர்ஸ்" இன் புத்தகங்களில் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்கள்?

(1) பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
(2) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
(3) பட்டியல், வரவுத்தாள், வைப்புத்துண்டு
(4) பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(5) பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு

(………)

05) பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது சுரேன் LTD இன் புத்தகங்களில் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களினதும் 31-03-2024 இல் உள்ளவாறான தேறிய விளைவைப் பிரிதிபலிக்கின்றது?

| | சொத்துக்கள் (ரூ) | + பொறுப்புக்கள் (ரூ) | = உரிமையாண்மை (ரூ) |
|---|---|---|---|
| (1) | + 104 000 | = + 82000 | + 22 000 |
| (2) | + 96 800 | = + 72000 | + 24 800 |
| (3) | + 104 000 | = + 72000 | + 32 000 |
| (4) | + 104 800 | = + 82000 | + 24 800 |
| (5) | + 114 000 | = + 82000 | + 32 000 |

(………)



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

06) "அனில் றேடேர்ஸ்" ஆல் திருப்பி அனுப்பப்பட்ட பொருட்கள் தொடர்பில் சுரேன் *LTD* இன் புத்தகங்களில் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப்பதிவு?

| கணக்குகள் | வரவு(ரூ000) | செலவு(ரூ000) |
|---|---|---|
| (1) உட்திரும்பல் கணக்கு | 138 | |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 138 |
| (2) உட்திரும்பல் கணக்கு | 120 | |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 120 |
| (3) உட்திரும்பல் கணக்கு | 138 | |
| VAT கட்டுப்பாட்டுக்கணக்கு | | 18 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 120 |
| (4) உட்திரும்பல் கணக்கு | 120 | |
| VAT கட்டுப்பாட்டுக்கணக்கு | 18 | |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 138 |
| (5) உட்திரும்பல் கணக்கு | 118 | |
| VAT கட்டுப்பாட்டுக்கணக்கு | 20 | |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 138 |

(………)

07) தனியுடமையான "சிவம் புடவையகம்" 31-03-2024 இல் முடிவடையும் வருடத்தில் ரூ 29000 பெறுமதியான புடவை ஒன்றினை தனது மகளின் பிறந்தநாள் பரிசாக மகளுக்கு அன்பளிப்பாக வழங்கினார் எனினும் இந்த அன்பளிப்புத் தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் எந்த வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை 31-03-2024 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் பொழுது இறுதி இருப்பானது பௌதீக இருப்பின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது.

இப் பொருள் நன்கொடையானது கணக்குப் புத்தகங்களில் சரியாகச் சீராக்கப்படுமாயின் வணிகத்தின் மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பவற்றின் மீதான தாக்கம்.

| | மொத்த இலாபம் | தேறிய இலாபம் |
|---|---|---|
| (1) | ரூ 29000 ஆல் அதிகரிப்பு | தாக்கமில்லை |
| (2) | ரூ 29000 ஆல் அதிகரிப்பு | ரூ 29000 ஆல் குறைவு |
| (3) | ரூ 29000 ஆல் அதிகரிப்பு | ரூ 29000 ஆல் அதிகரிப்பு |
| (4) | ரூ 29000 ஆல் குறைவு | தாக்கமில்லை |
| (5) | ரூ 29000 ஆல் அதிகரிப்பு | ரூ 29000 ஆல் குறைவு |

(………)

08) 'மீரா' வியாபாரம் ஒன்று தனியுடமை வணிகமாகும் இந் நிறுவனம்

- ஊழியர் சேமலாப நிதி (*EPF*) இற்கு, ஊழியர் மற்றும் தொழில் கொள்வோரின் பங்களிப்புகள் முறையே 8% மற்றும் 12% ஆகும்.
- ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (*ETP*) 3% பங்களிப்பு ஆகும்.
- மேற்படி பங்களிப்புகள் யாவும் ஊழியரின் மொத்த சம்பளத்தில் கணிக்கப்படுகின்றன.
- 2024 மார்ச் மாதம் ஊழியர்களின் 8% *EPF* பங்களிப்பு கழித்து அவர்களுக்கு காசாக வழங்கிய தேறிய சம்பளம் ரூ 828000 ஆகும்.

மீரா வியாபாரத்தின் 2024 மார்ச் மாதத்தற்கான மொத்தச் சம்பளச் செலவுகள் (EPF, ETF செலவுகள் உட்பட)

(1) ரூ 813000 (2) ரூ 913000 (3) ரூ 1150000 (4) ரூ 1035000 (5) ரூ 1135000

(………)



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

09) மஞ்சு PLC ஆனது நிர்வாக நடவடிக்கைகளுக்காக ரூ 600000 இற்கு அலுவலக உபகரணமொன்றை 01-03-2024 இல் கடனுக்குகொள்வனவு செய்தது கம்பனி இந்த உபகரணத்தின் நிறுவுதலுக்காக 02-03-2024 இல் ரூ 30000 காசாகச் செலுத்தியது அலுவலக உபகரணக் கடனானது 10 மாதாந்தச் சமதவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்பட வேண்டும் ரூ 20000 வட்டி உட்பட முதலாம் தவணைக் கட்டணம் 31-03-2024 இல் செலுத்தப்பட்டது.
பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளுள் எது இக் கொடுக்கல் வாங்கல்களின் தேறிய விளைவை 31-03-2024 இல் உள்ளவாறு பிரதிபலிக்கின்றது.

| | சொத்துக்கள் (ரூ000) | + பொறுப்புக்கள் (ரூ000) | = உரிமையாண்மை (ரூ000) |
|---|---|---|---|
| (1) | + 490 | = + 540 | -50 |
| (2) | + 520 | = + 520 | 0 |
| (3) | + 520 | = + 540 | -20 |
| (4) | + 490 | = + 510 | -20 |
| (5) | + 490 | = + 520 | -30 |

(………)

10) சுருதி PLC ஆனது உற்பத்தியில் பயன்படுத்துவதற்காக 01-03-2024 இல் ரூ 2400000 ஐச் செலுத்தி இயந்திரமொன்றை இறக்குமதி செய்தது. இது தொடர்பில் பின்வரும் செலவுகள் கம்பனிக்கு ஏற்பட்டன.

| | (ரூ000) |
|---|---|
| இடம் ஒழுங்குபடுத்தல் கிரயம் | 240 |
| நிறுவுதல் கட்டணம் | 60 |
| தொழில் தகமைக் கட்டணம் | 40 |
| உற்பத்திப் பொருள் விளம்பரம் | 100 |
| ஆரம்ப பரீட்சார்த்தக் கட்டணம் | 60 |
| தொடக்க விழாவிற்கான கிரயம் | 80 |
| இயந்திர பராமரிப்புக் கிரயம் | 50 |

LKAS - 16 (ஆதனம் பொறிமற்றும் உபகரணங்கள்) இன் படி இயந்திர ஆரம்ப இனங்காணலின் போது கிரயம் யாது?

(1) ரூபா 2880000 (2) ரூபா 2930000 (3) ரூபா 2900000
(4) ரூபா 2800000 (5) ரூபா 2740000

(………)

*** 11ஆம், 12 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**
பின்வரும் தகவல்கள் லக்கி விளையாட்டு கழக மொன்றின் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| விபரம் | 31/03/24 இல் (ரூ 000) | 31/3/23 இல் (ரூ 000) |
|---|---|---|
| திரண்ட நிதி | ? | 300 |
| ஆயுள் அங்கத்துவ நிதி | 160 | 200 |
| விளையாட்டு உபகரண நிதி | ? | 400 |

→ அங்கத்தவர் ஒருவரின் வருடாந்த சந்தா ரூ 6000 ஆகும்.

→ கழகத்தில் 31.03.2023 இல் உள்ளவாறு 60 அங்கத்தவர்கள் இருந்தனர். அவர்களுள் 10 பேர் ஆயுள் அங்கத்தவர்களாவர்.



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

→ நன்கொடைகள் அவற்றின் பயன்பாட்டு அளவின் அடிப்படையில் வருமானமாக இனங்காணப்படும்.

→ விளையாட்டு உபகரண நிதியைப் பயன்படுத்தி 31.03.2024 இல் 150,000 பெறுமதியான விளையாட்டு உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது.

→ 5 அங்கத்தவர்களைத் தவிர ஏனையவர்கள் இவ்வருடம் சந்தா முழுவதையும் செலுத்தியிருந்தனர்.

→ 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு செலவுகள் ரூபா 250000 ஆகும்.

11) "லக்கி" விளையாட்டு கழகத்தின் 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான மிகை யாது?

(1) ரூ 340,000 (2) ரூ 300,000 (3) ரூ 320,000
(4) ரூ 400,000 (5) ரூ 240,000

(………)

12) 31.03.2024 இல் இக் கழகத்தின் மொத்த உரிமையாண்மை 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கு இனங்காணப்பட்ட சந்தா வருமானமும் யாது?

| | மொத்த உரிமையாண்மை (ரூ 000) | சந்தா வருமானம் (ரூ 000) |
|---|---|---|
| (1) | 950 | 360 |
| (2) | 950 | 300 |
| (3) | 1010 | 300 |
| (4) | 950 | 340 |
| (5) | 1010 | 340 |

(………)

* **13ஆம், 14 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

சுஜி, வினு, நிலா ஆகியோர் பங்குடமை ஒன்றின் பங்காளர்கள். இவர்களது ஒப்பந்தத்தில் ஆரம்ப மூலதன மீதிகளுக்கு வருடாந்தம் 5% மூலதன வட்டி பகிர்வதுடன் இலாப, நட்டங்களைமுறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிருகின்றனர். 01.04.2023 இல் பங்காளர்களின் மூலதனக் கணக்கு, நடைமுறைக் கணக்கு மீதிகள் பின்வருமாறு காணப்பட்டன.

| | மூலதனக் கணக்கு (ரூ 000) | நடைமுறைக் கணக்கு (ரூ 000) |
|---|---|---|
| சுஜி | 6000 | 800 |
| வினு | 4000 | 400 |
| நிலா | 2000 | 200 |

பங்குடமையானது 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்காக ரூபா 1200 000 இலாபத்தை ஈட்டியுள்ளது. 31.03.2024 இல் நிலா பங்குடைமையில் இருந்து இளைப்பாறியதுடன் அவருக்கு இத் திகதியில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 3000 000 அகிய முழுத்தொகையும் கடன் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது. இத் திகதியிலிருந்து சுஜி, வினு ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்ந்து தொடர்ந்து நடாத்தினர். பங்குடமையின் நன்மதிப்பு மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கப்படுகின்றன.



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

13) 31.03.2024 இலுள்ளவாறான பங்குடமையின் நன்மதிப்பின் பெறுமதி யாது?

(1) ரூபா 800,000 (2) ரூபா 600,000 (3) ரூபா 3,600,000

(4) ரூபா 1,000,000 (5) ரூபா 3,000,000

(………)

14) சுஜி, வினு ஆகியோரின் 31.03.2024 இலுள்ளவாறான மொத்த உரிமையாண்மையின் தேறிய தாக்கம் யாது?

| | சுஜி | வினு |
|---|---|---|
| (1) | தாக்கம் இல்லை | தாக்கம் இல்லை |
| (2) | தாக்கம் இல்லை | ரூ 400 000 இனால் அதிகரிக்கும் |
| (3) | ரூ 600,000 இனால் குறையும் | தாக்கம் இல்லை |
| (4) | ரூ 600,000 இனால் குறையும் | ரூ 600 000 இனால் அதிகரிக்கும் |
| (5) | ரூ 600,000 இனால் அதிகரிக்கும் | ரூ 400 000 இனால் அதிகரிக்கும் |

(………)

15) உற்பத்தி நிறுவனமொன்றின் 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான மூலக்கிரயம், மொத்த உற்பத்திக் கிரயம் என்பன முறையே ரூ 1,800,000 , ரூ 3,200,000 ஆகும். உற்பத்திக் கிரயத்தில் அளவிடப்பட்ட நடைமுறை வேலைகளின் இருப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 260,000 ஆக இருந்தன.

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தின்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம் யாது?

(1) ரூ. 1140,000 (2) ரூ 1400,000 (3) ரூ 2060,000

(4) ரூ 1800,000 (5) ரூ 1660,000

(………)

16) வரையறுத்த சமந்த PLC ஆனது 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தில் இயந்திரம் ஒன்றை இரண்டாவது தடவையாக மீள் மதிப்பீடு செய்த போது ஏற்பட்ட பற்றாக்குறை ரூ 600,000 ஆகும். இவ் இயந்திரம் 31.03.2020 இல் முதலாம் தடவை மீள் மதிப்பீடு செய்த போது ரூ 400,000 மிகை ஏற்பட்டிருந்தது. நடப்பு ஆண்டில் இதற்கான சீராக்கங்கள் செய்யப்பட்ட பின் 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் 1600,000 ஆகும். அத்துடன் நடப்பு ஆண்டின் மொத்தச் செலவுகள் ரூ 1800,000 ஆகும். 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த வருமானமும் மொத்தமுற்றுமடங்கிய வருமானமும்

| | மொத்த வருமானம் (ரூ 000) | மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூ 000) |
|---|---|---|
| (1) | ............................ 3000 | ............................ 1200 |
| (2) | ............................ 3800 | ............................ 2000 |
| (3) | ............................ 3200 | ............................ 1200 |
| (4) | ............................ 3600 | ............................ 1800 |
| (5) | ............................ 3200 | ............................ 1400 |

(………)

17) பங்குடமையொன்றின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களுள் எவை சரியானவை?

A. காசுப்பாய்ச்சல் கூற்றினை பங்குடமைக்கென தயாரிக்க முடியும்.

B. பங்காளர்களின் பொருள் பற்றுக்கள் அவர்களின் இலாபத்தைப் பகிர்ந்தளிக்கும் போது சீராக்கப்பட வேண்டியதில்லை.

C. பங்குடமையொன்றின் இலாபமானது பங்காளர்களின் மூலதன வட்டி, சம்பளங்கள் மற்றும் இலாபப் பங்கு ஆகப் பகிரப்பட முடியும்.

D. பங்காளர்கள் பங்குடமைக்கு வழங்கிய கடனுக்கான வட்டியானது பங்குடமையின் செலவொன்றாக இனங்காணப்படாது.



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

(1) B,C,D மாத்திரம் (2) C மாத்திரம் (3) A,C,D மாத்திரம்
(4) A.B,C மாத்திரம் (5) A,C மாத்திரம்

(………)

18) 1890 பங்குடமைச் சட்டத்தின் 24ஆம் பிரிவின்படி பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை சரியானது / சரியானவை?

A. ஒவ்வொரு பங்காளரும் பங்குடமை வணிகத்தின் முகாமையில் பங்கு பற்றலாம் ஆனால் இது தொடர்பில் ஊதியம் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.

B. அனைத்து பங்காளர்களும் தமது மூலதன விகிதப்படி இலாப நட்டங்களைப் பகிர முடியும்.

C. இளைப்பாறும் பங்காளரொருவர் இளைப்பாறும் போது அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்கு வருடாந்தம் 5% வட்டியைப் பெற உரித்துடையவராவார்.

D. பங்காளர்கள் தமது மூலத பங்களிப்புக்கு மேலதிகமாக கடன் வழங்கியிருப்பின் அதற்கு வருடாந்தம் 5% வட்டி பெற உரித்துடையவர்.

(1) A,B,D மாத்திரம் (2) A,C,D மாத்திரம் (3) A,D மாத்திரம்
(4) A,C மாத்திரம் (5) A,B,C,D ஆகிய எல்லாம்

(………)

19) LKAS -1 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் சமர்ப்பித்தல்'' இன் பிரகாரம் பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை?

A. நிறுவனமொன்றின் செயற்பாட்டுப் பெறுபேறுகள் பற்றிய தகவல்களை அட்டுறு அடிப்படையில் தயாரித்தல் வேண்டும்.

B. நிறுவனமொன்றின் நிதிக் கூற்றுக்களின் தொகுதியிலுள்ள எல்லா நிதிக்கூற்றுக்களையும் சம அளவு முக்கியத்துவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

C. நிறுவனமொன்றிடமிருந்து குறித்த தகவல்களை வழங்கும்படி கேட்கக் கூடிய நிலையில் இல்லாத பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பொது நோக்க நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, C மாத்திரம்

(………)

20) ஆடைகளை உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றின் 2024 மார்ச் மாதத்தில் ஏற்பட்ட உற்பத்திக் கிரயத்துடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | (ரூ 000) |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 1580 |
| மூலப்பொருள் உட்சுமை கூலி | 600 |
| நேர் ஊழியம் | 1200 |
| உற்பத்தி மேந்தலைகள் (இயந்திர பெறுமான தேய்வு நீங்கலாக) | 900 |
| இயந்திரத்தின் வருடாந்த பெறுமான தேய்வு | 1200 |
| தீயால் அழிவடைந்த மூலப் பொருட்களின் கிரயம் | 380 |
| உற்பத்தியாக்கப்பட்ட ஆடைகளின் மாதாந்த களஞ்சியப்படுத்தல் கிரயம். | 250 |

01.03.2024 இலும் 31.03.2024 இலும் மூலப்பொருள் இருப்புக்கள் மற்றும் குறை வேலை இருப்புக்கள் எதுவும் இல்லை எனக் கருதுக.

31.03.2024 இல் முடிவடைந்த மாதத்திற்கான மொத்த உற்பத்திக் கிரயம் யாது?

(1) ரூ 4,000,000 (2) ரூ 3,400,000 (3) ரூ 4,250,000
(4) ரூ 4,630,000 (5) ரூ 4,380,000

(………)



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

21) வரையறுத்த திருமால் PLC ஆனது பொருட்களை ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்கிறது. இது தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | | (ரூ 000) |
|---|---|---|
| 01.04.2023 இலுள்ளவாறான உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | - | 525 |
| 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான செலுத்திய உத்தரவாத செலவுகள் | - | 375 |
| 31.03.2024 இலுள்ளவாறான உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | - | 800 |
| 31.03.2024 இலுள்ளவாறான விநியோக கிரயம் | - | 8425 |
| 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான இனங்காணப்பட்ட உத்தரவாத செலவுகள் | - | ? |

செலுத்திய உத்தரவாத செலவுகள் மட்டுமே விநியோக கிரயத்திலுள்ளடங்கியுள்ளன. LKAS 37 (ஏற்பாடுகள் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்) இன்படி 31.03.2024 இல் இனங்காணப்பட வேண்டிய உத்தரவாத செலவுகள் மற்றும் சரியான விநியோக கிரயம்.

| | இனங்காணப்பட வேண்டிய உத்தரவாத செலவுகள் (ரூ 000) | சரியான விநியோக கிரயம் (ரூ 000) |
|---|---|---|
| (1) | 550 | 8575 |
| (2) | 650 | 8675 |
| (3) | 650 | 8775 |
| (4) | 275 | 8675 |
| (5) | 275 | 8125 |

(………)

22) கணக்கீட்டு எண்ணக்கருக்களின் பிரயோகம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை?

A. இருப்புக்களை கிரயத்தினதும் தேறிய தேறக்கூடிய பெறுமதியினதும் குறைந்த பெறுமதியில் அளவிடுவதற்கான அடிப்படையானது இணைதலட எண்ணக்கருவினால் வழங்கப்படுகிறது.

B. வருமானக் கூற்றில் மொத்த இலாபம் காண்பதானது தேறல் எண்ணக் கருவிலானதாகும்.

C. சாதாரண பங்குதாரர்களுக்கு வழங்கிய பங்குலாபமானது நிறுத்தி வைத்த வருவாயில் கழித்து காட்டுவது அலகுசார் எண்ணக்கருவாகும்.

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம்

(………)

23) பின்வரும் தகவல்கள் "பாமா" PLC உடன் தொடர்பானவையாகும்.

| விபரம் | 31.03.2024 இல் (ரூ 000) | 31.03.2023 இல் (ரூ 000) |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 7000 | 5000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 2000 | 800 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 3000 | 1500 |

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தில் ரூபா 500,000 இடைக்கால பங்குலாபம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1000,000 நிறுத்தி வைத்த வருவாயில் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் உரிமை பங்கு வழங்கலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கட்டடம் ஒன்று முதல் முறையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டன.



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் மற்றும் மொத்த முற்றுமடங்கிய வருமானம் ஆகியன எவை?

| | இலாபம் (ரூ 000) | மொத்தமுற்றுமடங்கிய வருமானம் (ரூ 000) |
|---|---|---|
| (1) | 1500 | 1200 |
| (2) | 2000 | 3200 |
| (3) | 3000 | 1200 |
| (4) | 3000 | 4200 |
| (5) | 2000 | 1200 |

(………)

24) வரையறுத்த மீரா பொதுக் கம்பனியின் 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த முற்று மடங்கிய வருமானம் ரூ 4600,000 ஆகும். இவ் வருடத்தில் கட்டடம் ஒன்று இரண்டாம் தடவையாக மீள் மதிப்பீடு செய்யும் போது ஏற்பட்ட மிகை ரூ 1600,000 மொத்த வருமானத்திலுள்ளடங்கியுள்ளது. எனினும் இக் கட்டடம்31.03.2020 இல் முதல் தடவையாக மீள் மதிப்பிடப்பட்ட போது ரூ 700,000 மீள் மதிப்பீட்டு குறையாக ஏற்பட்டிருந்தது. 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம்.

| | வருடத்திற்கான இலாபம் (ரூ 000) | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ 000) |
|---|---|---|
| (1) | 2300 | 1600 |
| (2) | 3700 | 900 |
| (3) | 3000 | 1600 |
| (4) | 2300 | 900 |
| (5) | 3000 | 900 |

(………)

25) வாமன் PLC இன் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுகளானது 25.05.2024 இல் இயக்குநர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

A. 01.01.2024 இல் வாடிக்கையாளர் ஒருவரினால் கம்பனிக்கெதிராக தொடரப்பட்ட சட்ட வழக்கொன்றைத் தீர்ப்பதற்கான கொடுப்பனவாக ரூ 2200,000 செலுத்துவதற்கான நீதிமன்றக் கட்டளை 20.05.2024 இல் பெறப்பட்டது. எனினும் இது தொடர்பில்31.03.2024 இலுள்ளவாறு ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

B. 31.03.2024 இலுள்ளவாறான சரக்கிருப்பானது ரூபா 1800000 ஆல் மிகையாக மதிப்பிடப்பட்டுள்ளது என 10.04.2024 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

C. ரூபா 500,000 ஐத் தரவேண்டிய கடன்பட்டோர் ஒருவர் 15.05.2024 இல் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். இக் கடன்பட்டோரின் மீதியானது 04.04.2024 இல் செய்யப்பட்ட விற்பனை காரணமாக ஏற்பட்டதாகும்.

D. 31.03.2024 இல் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கான செலுத்த வேண்டிய ரூ 600,000 வரி மதிப்பீடானது இலங்கை சுங்கத்தினால் 05.05.2024 இல் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

LKAS 10 அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள் இன்படி இக் கம்பனியின் 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்படி எந்த நிகழ்வு / நிகழ்வுகளை <u>சீராக்கம் செய்யத் தேவையில்லை.</u>

(1) B மாத்திரம் (2) C மாத்திரம் (3) B,D மாத்திரம்

(4) A,B,D மாத்திரம் (5) B,C,D மாத்திரம்

(………)

26) LKAS காசுப்பாய்ச்சல் கூற்றின்படி, கம்பனி ஒன்றுடன் தொடர்பான 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | (ரூ 000) |
|---|---|
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | 2200 |
| மோட்டார் வான் அகற்றல் ஆதாயம் | 200 |
| ஆதனம் பொறி உபகரண பெறுமான தேய்வு | 360 |
| ஏனைய முற்றுமடங்கிய வருமான அதிகரிப்பு | 400 |
| இருப்பு அதிகரிப்பு | 520 |
| வியாபார வருமதிகள் அதிகரிப்பு | 280 |
| ஆண்டுக்கான வருமான வரிச்செலவு | 240 |

* நிதியாண்டின் வருமான வரியானது செலுத்தப்படவில்லை.
* 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசுப்பாய்ச்சல் யாது?

(1) ரூ 1240,000 (2) ரூ 1160,000 (3) ரூ 1960,000

(4) ரூ 920,000 (5) ரூ 1400,000 (………)

27) பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவையாகும்.

| | | |
|---|---|---|
| மொத்த இலாபம் (ரூ 000) | - | 700 |
| சராசரி கடன்பட்டோர் (ரூ 000) | - | 350 |
| மொத்த இலாப வீதம் | - | 25% |
| இருப்பு வைத்திருக்கும் காலம் | - | 48 நாட்கள் |

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனைகள் யாவும் கடன் அடிப்படையாகும். வருடமொன்றில் 360 நாட்கள் உள்ளதெனக் கருதுக. இக் கம்பனியின் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்கான கடன் சேகரிப்புக் காலம் மற்றும் சராசரி இருப்புக்கள்

| | கடன்பட்டோரிடம் பணம் சேகரிக்கும் காலம் (நாட்கள்) | சராசரி இருப்புக்கள் (ரூ 000) |
|---|---|---|
| (1) | 36 | 350,000 |
| (2) | 36 | 466,667 |
| (3) | 36 | 280,000 |
| (4) | 45 | 280,000 |
| (5) | 45 | 377,333 |

(………)



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

* **28ஆம், 29 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

உற்பத்திக் கம்பனி ஒன்று $mx$ எனும் மூலப்பொருளை பயன்படுத்துகிறது. இப் பொருளின் கட்டளையொன்றுக்கான கிரயம் ரூ 500 ஆகும். அதன் அலகொன்றுக்கான வருடாந்த இருப்பு வைத்திருத்தல் கிரயம் ரூ.100 ஆகும். இக் கம்பனி $mx$ மூலப் பொருள்களின் மீள் கட்டளைத் தொகையைத் தீர்மானிக்க சிக்கனக் கட்டளைத் தொகை $(EOQ)$ மாதிரியைப் பயன்படுத்துகிறது. பின்வரும் தகவல்கள் $mx$ மூலப் பொருட்களுடன் தொடர்பானவை

ஆகக் கூடிய பாவனை (வாரமொன்றுக்கு) - 750 அலகுகள்
ஆகக் குறைந்த பாவனை (வாரமொன்றுக்கு) - 250 அலகுகள்
சிக்கனக் கட்டளைத் தொகை - 2000 அலகுகள்

**<u>விநியோகக் காலம்</u>**

ஆகக் குறைந்தது - 3 வாரங்கள்
சராசரி - 4 வாரங்கள்

28) மூலப்பொருள் $mx$ இன் வருடாந்தக் கேள்வி எவ்வளவு?

(1) 2500,000 அலகுகள் (2) 5000,000 அலகுகள் (3) 400,000 அலகுகள்
(4) 800,000 அலகுகள் (5) 1000,000 அலகுகள்

(.........)

29) மூலப்பொருள் $mx$ இன் ஆகக்கூடிய இருப்பு மட்டம் எது?

(1) 2750 அலகுகள் (2) 5000 அலகுகள் (3) 4750 அலகுகள்
(4) 4500 அலகுகள் (5) 3750 அலகுகள்

(.........)

30) கிரயங்கள் வகைப்படுத்தல் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது/எவை சரியானது/சரியானவை.

A. சரக்கிருப்பு மதிப்பீட்டுக்காக “தொடர்பான” மற்றும் “தொடர்பற்ற” என வகைப்படுத்தப்படுகிறது.
B. தீர்மானம் எடுக்க நிலையான கிரயம், மாறும் கிரயம் என வகைப்படுத்தப்படுகிறது.
C. இருப்பு மதிப்பீட்டின் போது காலக்கிரயங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(1) $A$ மாத்திரம் (2) $B$ மாத்திரம் (3) $B, C$ மாத்திரம்
(4) $A, B$ மாத்திரம் (5) $A, C$ மாத்திரம்

(.........)

* **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31) நிறுவனமொன்றின் முகாமைக் கணக்கீட்டுத் தகவல்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா $(T)$ அல்லது பிழையா $(F)$ எனக் குறிப்பிடுக.

| **<u>கூற்று</u>** | **<u>(T / F)</u>** |
|---|---|
| $A -$ நிறுவனத்தின் முகாமைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தகவல்களை வழங்குகிறது. | .................. |
| $B -$ தகவல்களை வழங்குவதற்கு உள்ளக, வெளியக வழிகாட்டல்களைப் பின்பற்றுகிறது. | .................. |
| $C -$ நிறுவனத்தின் பணரீதியான, மற்றும் பண ரீதியற்ற தகவல்கள் இரண்டையும் வழங்குகிறது. | .................. |
| $D -$ நிறுவனத்தின் எதிர்வு கூறப்பட்ட தகவல்களை மட்டும் வழங்குகிறது. | .................. |



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

32) வணிகமொன்றின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. பின்வரும் தகவல்கள் 2024 ஜனவரி மாதத்துடன் தொடர்பானவையாகும்.

01.01.2024 இல் உள்ளவாறான காசுக் கணக்கு மீதி ரூபா 400,000 சாதகமான மீதியையும் அத் திகதியில் உள்ளவாறான வங்கிகூற்று மீதி அதே மீதியையும் காட்டியது.

<u>**05.02.2024 இல் பெறப்பட்ட 2024 ஜனவரி மாத வங்கி கூற்றின் சுருக்கம்**</u>

| | (ரூ 000) |
|---|---|
| வசூலிக்கப்பட்ட மொத்தக் காசோலைகள் | 4400 |
| கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மொத்தக் காசோலைகள் | 3000 |
| நேரடியாகப் பெறப்பட்ட கடன்பட்டோரின் வைப்புக்கள் | 600 |
| நிலையான கட்டளையில் வங்கி செலுத்திய வாடகை | 150 |

<u>**மேலதிக தகவல்கள்**</u>

| | |
|---|---|
| ஜனவரி மாத பெறுவனவு நாளேட்டின் மொத்தம் | 5000 |
| ஜனவரி மாத கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் | 3300 |
| வைப்புச் செய்து மறுக்கப்பட்ட காசோலைகள் | 300 |

<u>பின்வருவனவற்றைக் கணிப்பிடுக</u>

(அ) 31.01.2024 இலுள்ளவாறு வங்கிக்கூற்று மீதி ரூ 000 ..................................

(ஆ) 31.01.2024 இலுள்ளவாறு சீராக்கிய காசு மீதி ரூ 000 ..................................

33) 31.03.2024 இல் உள்ளவாறான வணிகமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ660,000 ஆக இருந்தது. இது இத் திகதியில் கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தத்துடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையில் பின்வருவன வெளிப்படுத்தப்பட்டன.

* ரூ 52000 விற்பனைப் பட்டியல் ஒன்று விற்பனை நாளேட்டில் ரூ 25000 ஆகப் பதியப்பட்டிருந்தது.
* கடன்பட்டோர் பேரேட்டில் அறவிடமுடியாக் கடனாக பதிவளிக்கப்பட்ட ரூபா 30000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

31.03.2024 இல் உள்ளவாறு பின்வருவனவற்றை அடையாளங் காண்க.

(அ) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கு முன்னரான கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தம் ரூபா ..................................

(ஆ) மேற்படி வழுக்களைத் திருத்திய பின்னரான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதி ரூபா ..................................

34) தனியுடமையான பிரபா வியாபாரமானது "விற்பனை இன்றேல் திருப்புக" என்ற அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்கிறது. முகவருக்கு பொருட்கள் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் விற்பனை செய்யப்படாத பொருட்களை திருப்பி அனுப்ப வேண்டும் எனும் நிபந்தனையில் 10.03.2024 இல் ரூபா 600,000 கிரயமான பொருட்கள் முகவர் ஒருவருக்கு அனுப்பப்பட்டது. இப் பொருட்களின் விற்பனை விலையானது கிரயத்தில் 25% மொத்த இலாபம் வைத்து அனுப்பப்பட்டவை ஆகும். இம் முகவரால் 31.03.2024 வரை 60% ஐ மட்டுமே விற்பனை செய்யக் கூடியதாக இருந்தது. 31.03.2024 இல் உள்ளவாறு முகவரிடமிருந்த இருப்பின் தேறியதேறக் கூடிய பெறுமதி ரூபா 220,000 ஆகும்.



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

மேற்படி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) 31.03.2024 இல் முடிவடைந்த மாதத்துக்கான விற்பனை வருவாய் ரூ ……………………

(ஆ) 31.03.2024 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட இருப்பின் பெறுமதி ரூ ……………………

35) LKAS (கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீதான மாற்றம் மற்றும் வழுக்கள்) இற் கிணங்க பின்வரும் கூற்றுக்கள் சரியா (T) அல்லது பிழையா (F) எனக் குறிப்பிடுக.

| கூற்று | [சரி(T)/பிழை(F)] |
|---|---|
| A – கணக்கீட்டு கொள்ளை மாற்றங்கள் நிதிக் கூற்றுக்களில் நிகழ்காலத்திலிருந்து பின்நோக்கிய வகையில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். | …………………………… |
| B – புதிய தகவல்கள் அல்லது புதிய அபிவிருத்திகளின் காரணமாக கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. | …………………………… |
| C – கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீதான மாற்றங்கள் எப்பொழுதும் முன்னோக்கிய வகையில் பிரயோகிக்கப்படுகிறது. | …………………………… |
| D – சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலத்தினை மாற்றுதல் கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாகும். | …………………………… |

36) LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன்படி கம்பனி ஒன்றின் பின்வரும் காசுப்பாய்ச்சல் ஒவ்வொன்றையும் வகைப்படுத்துக.

A – குத்தகை ஒன்றிற்கான ஆரம்ப கொடுப்பனவைச் செலுத்துதல் ……………………

B – வேறு நிறுவனங்களின் தொகுதிக்கடன்களைக் கொள்வனவு செய்வதற்கு செலுத்தப்பட்ட காசு ……………………

C – குத்தகை பொறுப்பு ஒன்றினைத் தீர்ப்பதற்காகச் செலுத்தப்பட்ட காசு ……………………

D – உரிமைப் பங்கு வழங்கலிருந்து பெறப்பட்ட காசு ……………………

37) சிவம் PLC ஆனது 01.04.2020 இல் ரூபா 2000,000 இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. இத்தினத்தில் அதன் பயன்தரு ஆயுள் காலம், எஞ்சிய பெறுமதி ஆகியன முறையே 5 வருடங்கள், ரூ 200,000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. 01.04.2023 இல் இவ் இயந்திரத்தின் முக்கிய பகுதியொன்று ரூ 560,000 கிரயத்தில் பொருத்தப்பட்டது. இதனால் இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி, பயன்தரு ஆயுள் காலம் என்பன மீளாய்வு செய்யப்பட்டது. இதற்கமைய ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதியானது முறையே 7 வருடங்கள் மற்றும் ரூபா 360,000 ஆக திருத்தியமைக்கப்பட்டது.

<u>பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.</u>

(அ) 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுமானத் தேய்வு ரூ ……………………

(ஆ) 31.03.2024 இல் உள்ளவாறான இயந்திரத்தின் முன் கொண்டு செல் தொகை ரூ ……………………



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

38) கம்பனியொன்றின் 31.03.2024 இலுள்ளவாறான துரித சொத்து விகிதமானது 1.5 : 1 ஆக இருந்தது. கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கியுள்ள ஏனைய சொத்துக்களுக்கு மேலதிகமாக ரூபா 450,000 இருப்புகளும், ரூ 150,000 முற்பண செலவுகளும் உள்ளடங்கியுள்ளது. இத் திகதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ.600,000 ஆக இருந்தது.

31.03.2024 இல் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) நடைமுறைச் சொத்துக்கள் : ரூ ...................................

(ஆ) நடைமுறை விகிதம் : ரூ ...................................

39) நிறுவனமொன்றின் கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியா (T) அல்லது பிழையா (F) எனக் குறிப்பிடுக.

| கூற்று | [சரி(T)/பிழை(F)] |
|---|---|
| A – உயர் வட்டிக் காப்பு வீதமானது கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான இயலுமையின் அதிகரிப்பினைக் காட்டும். | ..................... |
| B – உயர் சரக்குப் புரள்வு வீதமானது உயர்ந்த சரக்கு வைத்திருக்கும் காலத்தைக் காட்டும் | ..................... |
| C – தேறிய தேறத்தக்க பெறுமதியில் வருட இறுதிச் சரக் கிருப்பின் மதிப்பீடானது மொத்த இலாப விகிதத்தில் தாக்கத்தினை செலுத்தாது | ..................... |
| D – கடன் பட்டோரிடமிருந்து கழிவுடன் சேகரிக்கும் காசு காரணமாக நடைமுறை விகிதமும் விரைவு விகிதமும் குறைவடையும் | ..................... |

40) வரையறுக்கப்பட்ட டிலானி கம்பனியில் நிலம் ஒன்று 01-04-2019 இல் ரூபா 2000 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு 01.04.2021 இல் முதலாம் தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டு திரும்பவும் 01.04-2023 இல் இரண்டாம் தடவையும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. இதனால் ஏற்பட்டமிகை ரூபா 1000 000 ஆகும்.

(அ) நிலம் முதலாம் தடவை மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதி யாது ரூ...................................

(ஆ) நிலம் இரண்டாம் தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மிகைக்கான பொது நாட்குறிப்பேட்டுப் பதிவினை எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

41) வரையறுத்த "அல்பா" PLC ஆனது 31-03-2024 இல் பொறியொன்றை 5 வருடங்களுக்குப் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பெற்றுக்கொண்டது. குத்தகை உடன்படிக்கையின் படி 31-03-2024 இல் ஆரம்பக் கொடுப்பனவாக ரூபா 2500 000 செலுத்தப்பட்டது குத்தகைக் காலத்தில் ஒவ்வொன்றும் ரூபா 875 000 ஆன ஐந்து வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். முதலாவது தவணைக் கட்டணம் 31-03-2025 இல் நிலுவையாகவுள்ளது. குத்தகைக் காலம் முழுவதும் செலுத்த வேண்டிய மொத்த வட்டி ரூ 1375 000 ஆகும். இது 31-03-2025 இல் முடிவடையும் வருடத்திற்கான வட்டி ரூ 375 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது.

SLFRS - 16 - குத்தகையின் படி 31-03-2024 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

(அ) சொத்து பாவனை உரிமை ரூ...................................

(ஆ) நடைமுறைப் பொறுப்பில் குத்தகை பொறுப்பு ரூபா...................................



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

42) பொதுப்பேரட்டில் பேணப்படும் பின்வரும் கணக்குகளிற்கான பொருத்தமான வகைப்படுத்தலைக் குறிப்பிடுக.

| கணக்கு | வகைப்படுத்தல் |
|---|---|
| A - உட்திரும்பல் | ................................... |
| B - விற்பனை உத்தரவாத ஏற்பாடு | ................................... |
| C - மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | ................................... |
| D - ஊழியர் நம்பிக்கை நிதி செலவு | ................................... |

43) சாரங்கன் PLC ஆனது இயந்திரங்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்கின்றது இயந்திரங்களை நிறுவுவதற்கு விசேட அறிவு தேவைப்படுவதால்கம்பனியானது இயந்திர நிறுவுதலையும் மேற்கொள்கின்றது. இயந்திரம் ஒன்றின் விற்பனை விலை நிறுவுதல் கட்டணம் முறையே ரூ 2000 000 ரூ 300 000 ஆகும். கம்பனியானது 01-03-2024 இல் 06 இயந்திரங்களை விற்பனை செய்து அவற்றை நிறுவுதற்கான ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது. 31-03-2024 இல் கம்பனி இயந்திரங்களில் 04 இயந்திரங்களை விநியோகித்ததுடன் அவற்றுள் 03 இயந்திரங்களின் நிறுவுவதலைப் பூர்த்தி செய்துள்ளதுடன் இவ்வொப்பந்தத்தில்கம்பனி 01.03-2024 இல் ரூ 9000 000 முற்பணமாகப் பெற்றுக் கொண்டது.

SLFRS 15 (வாடிக்கையாளர்களுடனாள ஒப்பந்களிரிருந்தான வருவாய்) இன் படி இந்த ஒப்பந்தத்துக்கான பின்வருவனவற்றை அடையாளம் காண்க.

(அ) 31-03-2024 இல் முடிவடைந்த வருடத்தில் இனங்காணப்பட்ட விற்பனை வருவாய் ரூ...................................

(ஆ) 31-03-2024 இல் முடிவடைந்த வருடத்தில் இனங்காணப்பட்ட வருவாய் ரூ...................................

(இ) 31-03-2024 இல் உள்ளவாறு உழைக்கப்படாத வருவாய் ரூ...................................

44) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகம் (2018) இன்படி பின்வரும் வசனங்களைப் பூர்த்தி செய்க.

(A) அளவீட்டு அடிப்படைகள் பரந்தளவில் .......................................... மற்றும் ...................................... என வகைப்படுத்தப்படுகின்றன.

(B) அளவீட்டு அடிப்படையினைத் தேர்ந்தெடுக்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய இரு காரணிகள் .................................... மற்றும் .................................... ஆகும்.

45) ஆரா, மற்றும் மீரா ஆகியயோர் இலாப நட்டங்களை முறையே 3:2 என்ற விகிதத்தில பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாக காணப்பட்டனர். 01.04.2023 இல் உள்ளபடியான மூலதன கணக்கு மீதிகள் ஆரா, மீரா முறையே ரூ 6000,000 ரூ 4000,000 ஆக இருந்தது. தாரா என்பவர் 01.04.2023 இல் மூலதனம், நன்மதிப்பு பங்கு ஆகிய இரண்டிற்குமாக ரூ 4000,000 காசினை கொண்டு வந்துள்ளார். பங்குடமையின் நன்மதிப்பு பங்காளர் மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கம் செய்யப்பட்டது. புதிய இலாப நட்டம் பகிரும் விகிதம் ஆரா, மீரா, தாரா முறையே 5:3:2 என்ற விகிதத்தில் பகிர இணங்கப்பட்டது. நன்மதிப்பு சீராக்கத்தின் பின் புதிய பங்காளரான தாராவின் மூலதனக் கணக்கு மீதி ரூ 3400,000 ஆகும்.



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

<u>பின்வருனவற்றைக் குறிப்பிடுக.</u>

(A) 01.04.2023 இலுள்ளவாறான பங்குடமையின் நன்மதிப்பு ரூ000 ……………………………..

(B) சீராக்கிய பின் 01.04.2023 இல் உள்ளவாறன பின்வரும் பங்காளர்களின் மூலதனக் கணக்கு மீதிகள்

(அ) ஆரா ரூ (000)………………………………………

(ஆ) மீரா ரூ (000) ………………………………………

46) பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றினால் விற்பனை செய்யப்பட்ட பொருளொன்றுடன் தொடர்பானவை

| திகதி | விபரம் | அலகுகள் | அலகு ஒன்றின் விலை |
|---|---|---|---|
| 01.01.2024 | இருப்பு மீதி | 2000 | ரூ.50 |
| 15.01.2024 | கொள்வனவுகள் | 4000 | ரூ.80 |
| 25.01.2024 | கொள்வனவுகள் | 6000 | ரூ.90 |
| 30.01.2024 | விற்பனைகள் | 11000 | ரூ.100 |

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விலையிடல் முறையின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

| | | 2024 ஜனவரி மாத <u>விற்பனைக் கிரயம் (ரூ)</u> | 31.01.2024 இல் இறுதி <u>இருப்பு (ரூ)</u> |
|---|---|---|---|
| (அ) | முதல் உள் முதல் வெளி ($FIFO$) | ………………………… | ……………………… |
| (ஆ) | நிறையிட்ட சராசரி கிரய முறை ($WAC$) | ………………………… | ……………………… |

47) மாருதி $PLC$ இன் 01.04.2023 இல் காணப்பட்ட பின்வரும் மீதிகள் வருமாறு

| | <u>ரூ 000</u> |
|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூ30 படியானது) | 6000 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 1200 |

01.10.2023 இல் கம்பனியானது பங்கொன்று ரூ 30 பிரதிபயனில் ரூபா 1500,000 ஐ நிறுத்தி வைத்த வருவாயினை மூலதனமாக்கியது. 31.12.2023 இல் கம்பனியானது இத்தினத்தில் 5 பங்குகளுக்கு 1 பங்கு வீதம் பங்கு ஒன்று ரூ 20 பிரதிபயனில் உரிமை வழங்கலை மேற்கொண்டது. தற்போது காணப்படும் எல்லா பங்குதாரர்களும் உரிமை வழங்கலில் ஈடுபட்டனர். 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் ரூபா 700,000 ஆகும்.

(அ) மேற்படி பங்கு வழங்கல் காரணமாக பெற்ற காசு எவ்வளவு ரூ ………………………….

(ஆ) 31.03.2024 இல் உள்ளவாறான உரிமையாண்மை ரூ ………………………………………..

48) நிறுவனமொன்றின் கணக்கீட்டுப் பதிவேடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

| | ரூ 000 |
|---|---|
| 01.04.2023 இல் உள்ளவாறான மொத்த சொத்துக்கள் | 1200 |
| 01.04.2023 இல் உள்ளவாறான மொத்த பொறுப்புக்கள் | 400 |
| 31.03.2024 முடிவடைந்த வருட இலாபம் | 350 |
| 31.03.2024 முடிவடைந்த ஆண்டுக்கு உரிமையாளர் எடுப்பனவு | 150 |
| 31.03.2024 இலுள்ளவாறான தேறிய சொத்துக்களில் அதிகரிப்பு | 650 |



kalvi.lk

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

31.03.2024 இலுள்ளவாறான பொறுப்புக்களில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு 400

31.03.2024 இல் முடிவடைநத வருடத்தில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) 31.03.2024 இல் உள்ளவாறு மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா ……………………….

(ஆ) 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையாளர் ஈடுபடுத்திய மேலதிக மூலதனம் ரூபா ……………………………….

49) $LKAS-37$ இன்படி (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்பு, நிகழத்தக்க சொத்து) கீழே தரப்பட்ட நிகழ்வுகள் தொடர்பில் அது ஏற்பாடா, நிழத்தக்க பொறுப்பா, நிகழத்தக்க சொத்தா என அதற்கு நேரே குறிப்பிடுக.

| **நிகழ்வு** | **ஏற்பாடு / நிகழத்தக்க பொறுப்பு / நிகழத்தக்க சொத்து** |
|---|---|
| $A-$ நிறுவனத்தின் பிரிவு ஒன்று மூடவேண்டிய நிலை தோன்றினால் செலுத்த வேண்டிய இழப்பீடு | …………………………… |
| $B-$ விற்பனை செய்த பொருள் தொடர்பான குறைபாடு தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட இழப்பீடு | …………………………… |
| $C-$ சேவையிலிருந்து பணி இறக்கம் செய்யப்பட்ட ஊழியரினால் வழக்குத் தாக்கல் செய்து உறுதிப்படுத்தப்பட்ட கடப்பாடு | …………………………… |
| $D-$ வணிகத்தின் காணியினை அரசு சுவீகரித்தமையால் இழப்பீட்டுக்கு விண்ணப்பித்தல் | …………………………… |

50) உற்பத்திக் கம்பனியொன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற உருப்படியொன்று தொடர்பிலான தகவல்களில் சில பின்வருமாறு

- அலகு ஒன்றின் கொள்வனவுக் கிரயம் ரூ 120
- அலகு ஒன்றை வைத்திருப்பதற்கான (பராமரிப்பு கிரயம்) வருடாந்த கிரயம் அலகின் கொள்வனவுக் கிரயத்தில் 10% ஆகும்.
- கட்டளை ஒன்றுக்கான கிரயம் ரூ 300
- காலாண்டுக்கான கேள்வி 20000 அலகுகள்

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) பொருளாதாரக் கட்டளைக் கணியம் $(EOQ)$ ……………………………………………..

(ஆ) வருடாந்த மொத்த இருப்பு பராமரிப்பு கிரயம் ரூபா ……………………………………

(இ) வருடாந்த மொத்தக் கட்டளைக் கிரயம் ரூபா ……………………………………………..



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru.
## 5 th Term Examination - 2024

FWC

**கணக்கீடு**
**Accounting**

**Three Hours 10 Min.**

**Gr -13 (2024)**

**33** **T** **II**

## பகுதி II

**அறிவுறுத்தல்கள்:**
- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- இவ்வினாத்தாள்களுக்கு 200 புள்ளிகள் உரித்தாகும். $(5 \times 40 = 200)$

01) வரையறுத்த **மாதவன்** பொதுக் கம்பனியின் 31.03.2024 இல் உள்ளவாறான சுருக்கிய பரீட்சை மீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ 000) | செலவு (ரூ 000) |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 99000 | |
| 01.04.2023 இல் திரண்ட பெறுமானத் தேய்வு | | 25000 |
| ஏனைய வருமானம் | | 6500 |
| விற்பனைகள் | | 72800 |
| விற்பனைக் கிரயம் | 42700 | |
| இருப்பு | 3500 | |
| வியாபார வருமதிகள் | 7250 | |
| வியாபார கொடுக்குமதிகள் | | 5400 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 540 | |
| விநியோகக் கிரயம் | 8350 | |
| நிர்வாகச் செலவுகள் | 7700 | |
| ஏனைய செலவுகள் | 1250 | |
| நிதிக்கிரயம் | 300 | |
| செலுத்திய வருமான வரி | 1650 | |
| 01.04.2023 இல் வருமான வரிக்கான ஏற்பாடு | | 450 |
| 01.04.2023 இல் காணி மீதான மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 3500 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 45000 |
| 01.04.2023 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 20800 |
| இழப்பீட்டுக் கோரிக்கைக்கான ஏற்பாடு | | 550 |
| குத்தகைக் கொடுப்பனவுகள் | 7760 | |
| | **180000** | **180000** |



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**மேலதிக தகவல்கள் :**

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) 31.03.2024 இல் உள்ள சரக்கிருப்பின் கிரயம் ரூ 3800,000 மற்றும் அதன் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ 3500,000 ஆகும். எனினும் விற்பனைக்கிரய கணிப்பீட்டின் போது தேறிய தேறத்தக்க பெறுமதி மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதுவே பரீட்சை மீதியில் இருப்பாக காட்டப்பட்டுள்ளது.

(ii) நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு இயக்குநர்களால் 31.05.2024 இல் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி

- கம்பனிக்கு எதிராக வாடிக்கையாளர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்பானது 20.05.2024 இல் வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய கோரிக்கையின் முழுக்கொடுப்பனவாக ரூ 750,000 மேற்படி திகதியில் செலுத்தப்பட்டது. இவ்வழக்கானது 01.01.2024 இல் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் கம்பனியின் வழக்கறிஞர்களின் அபிப்பிராயப்படி இனங்காணப்பட்ட ஏற்பாடானது 31.03.2024 இல் உள்ளவாறான பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ளது.
- கம்பனியின் வியாபாரக் கடன்பட்டோர் ஒருவர் கடன் தீர்க்க வகையற்றவராக 25.05.2024 இல் நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளார். 31.03.2024 இல் உள்ளவாறான பரீட்சை மீதியிலுள்ள வியாபார வருமதியில் இத்தொகையான ரூ 250,000 உம் உள்ளடங்கியுள்ளது.

(iii) செலுத்திய வருமான வரியானது கடந்த வருடத்திற்காகச் செலுத்திய ரூ 400,000 ஐயும் நடைமுறை வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளுக்குச் செலுத்திய வரியையும் உள்ளடக்கியுள்ளது. நடைமுறை வருடத்தின் இறுதிக் காலாண்டுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரி ரூ 350,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(iv) இயக்குனர் கட்டணமாக ரூ 1600,000 மற்றும் சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட்ட இடைக்காலப் பங்குலாபம் ரூ 600,000 என்பன நிர்வாகச் செலவுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(v) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கமும் அவற்றின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலங்களும் பின்வருமாறு,

| விபரம் | கிரயம்/ பெறுமதி 31.03.2024ல் | திரண்ட பெறுமானத் தேய்வு 01.04.2023ல் | பயன்தரு ஆயுட் காலம் (வருடங்கள்) |
|---|---|---|---|
| காணி | 25000 | | |
| கட்டடம் | 35000 | 10000 | 14 |
| மோட்டார் வாகனங்கள் | 25000 | 12500 | 10 |
| அலுவலக உபகரணங்கள் | 14000 | 2500 | 7 |
| | 99000 | 25000 | |

(vi) நடைமுறை வருடத்திற்கான பெறுமானத்தேய்வானது இதுவரை செய்யப்படவில்லை 01.10.2023 இல் ரூ 7000,000 பெறுமதியான அலுவலக உபகரணம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு அது உரியவாறு பதியப்பட்டுள்ளதுடன் அதன் பயன்தரு ஆயுட்காலமும் 7 வருடங்களாகும்.



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(vii) வணிகத்தின் காணியானது முதல் தடவையாக 31.03.2020 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இம் மீள்மதிப்பீட்டிலிருந்தான மிகையானது பரீட்சை மீதியில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இக்காணியானது 31.03.2024 இல் இரண்டாவது தடவையாக ரூ. 21000000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் இது வரை கணக்குகளில் இது பதியப்படவில்லை.

(viii) கட்டடங்கள் இரண்டாவது தடவையாக $31-03-2024$ இல் ரூ. 25000000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. $31-03-2019$ இல் முதற் தடவையாக கட்டடங்கள் மீள் மதிப்பிடு செய்யப்பட்ட போது அது ரூ. 1000000 குறை ஏற்பட்டுள்ளது. இரண்டாவது தடவை மீள் மதிப்பீட்டுக்காக எதுவித கணக்கீட்டுப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை

(ix) மோட்டார் வாகனங்களில் ரூபா 10000,000 கிரயமானவை 01.01.2024 இல் ரூ. 6500,000 இற்கு காசுக்கு விற்கப்பட்டன. இத்தொகை காசுக் கணக்கில் வரவிலும் ஏனைய வருமானக் கணக்கில் செலவிலும் பதியப்பட்டது தவிர இவ் அகற்றல் தொடர்பில் வேறெந்தக் கணக்கீட்டுப் பதிவுகளும் இடம் பெறவில்லை. அகற்றப்பட்ட மோட்டார் வாகனம் 01.01.2020 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(x) கம்பனியானது 01.04.2023 இல் கட்டடமொன்றை 5 வருடங்களுக்குப் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக குத்தகை உடன்படிக்கை ஒன்றை செய்துள்ளது. குத்தகை உடன்படிக்கையின் படி 01.04.2023 இல் ஆரம்பக் கொடுப்பனவாக ரூ. 3500000 செலுத்தப்பட்டது. குத்தகைக் காலத்தில் ஒவ்வொன்றும் ரூ. 4260000 ஆன ஐந்து வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் முதலாவது தவணைக் கட்டணமானது. 31.03.2024 இல் செலுத்தப்பட்டது. குத்தகை காலம் முழுவதும் செலுத்த வேண்டிய மொத்த வட்டி ரூ. 2300000 ஆகும். இது 31.03.2024, 31.03.2025 இல் முடிவடையும் வருடத்திற்கான வட்டி முறையே ரூ. 625000, ரூ. 530000 ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. கம்பனியால் செலுத்தப்பட்ட ஆரம்பக் கொடுப்பனவு முதலாவது தவணைக் கட்டணம் ஆகியன மட்டுமே பரீட்சை மீதியில் உள்ள குத்தகைக் கொடுப்பனவுகள் கணக்கில் பதியப்பட்டுள்ளது. இது தொடர்பில் வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை சொத்தின் சட்ட ரீதியான உடமையானது குத்தகை கால முடிவில் மாதவன் $PLC$ இற்கு மாற்றப்படுகின்றது. கட்டடத்தின் பயன்தரு ஆயுட்காலம் 15 வருடங்களாகும்.

(xi) கம்பனியானது பொருட்களை விற்பனை செய்வதற்கும் விற்பனைக்குப் பின் முதல் 06 மாத காலப்பகுதியில் பராமரிப்பு சேவையை வழங்குவதற்குமென 01.12.2023 இல் வாடிக்கையாளர் ஒருவருடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தியிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் மொத்தக் கைம்மாறு ரூ. 2900,000 ஆகும். இதனுள் ரூ. 2000,000 ஆனது பொருள் விற்பனையுடனும் மீதி பராமரிப்பு சேவைகளுக்கான ஏற்பாட்டுடனும் தொடர்புடையதாகும். கம்பனியானது ஒப்பந்தத்தில் உடன்பட்டபடி எல்லாப் பொருட்களையும் 31.12.2023 இல் விற்பனை செய்துள்ளது. ஒப்பந்தத்தின் மொத்தக் கைமாறானது காசாக பெறப்பட்டிருந்தது. இத்தொகை முழுவதும் விற்பனைக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது;**

$LKAS-1$ நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் இன்படி பிரசுர நோக்கத்துக்காக மாதவன் $PLC$ இன் பின்வரும் நிதிக் கூற்றுக்கள் (குறிப்புக்கள் உள்ளடங்கலாக)

(1) 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று.

(2) 31.03.2024 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

(3) 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

(மொத்தம் 40 புள்ளிகள்)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

02) (அ) வரையறுத்த அச்சுதன் பொதுக்கம்பனியானது ஏற்றுமதி செய்யப்படும் பிளாஸ்ரிக் வகையிலான சிறிய கொள்கலன்களை உற்பத்தி செய்கிறது. இக் கொள்கலனுக்கு "$N$""$P$" மற்றும் "$Q$" ஆகிய மூன்று மூலப் பொருட்களைப் பயன்படுத்துகிறது. இதனுடன் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | ***N*** | ***P*** | ***Q*** |
|---|---|---|---|
| அலகொன்றுக்குத் தேவைப்படும் மூலப்பொருள் ($kg$) | 10 | 8 | 5 |
| மறுகட்டளைத் தொகை ($kg$) | ? | 15000 | 20000 |
| மறுகட்டளை மட்டம் ($kg$) | ? | 24000 | ? |
| ஆகக் கூடிய இருப்பு மட்டம் ($kg$) | 34000 | ? | ? |
| **விநியோகக் காலம் (வாரங்களில்)** | | | |
| ஆகக்குறைந்தது | 3 | 2 | 4 |
| ஆகக்கூடியது | 5 | 4 | 6 |

இவ் உற்பத்திப் பொருளின் வாராந்த உற்பத்தியானது 300 தொடக்கம் 500 அலகுகள் வீச்சில் வேறுபடுகின்றது.

**வேண்டப்படுவது**

(1) மூலப்பொருள் $N$ இற்கான மறுகட்டளை மட்டம், மறுகட்டளைத்தொகை, மற்றும் சராசரி இருப்பு மட்டங்கள்

(2) மூலப்பொருள் $P$ இற்கான ஆகக்கூடிய, ஆகக் குறைந்த மற்றும் சராசரி இருப்பு மட்டங்கள்

(3) மூலப்பொருள் $Q$ இற்கான மறுகட்டளை, ஆகக்கூடிய மற்றும் ஆகக் குறைந்த இருப்பு மட்டங்கள்

(21 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் தகவல்கள் வரையறுத்த **"மாருதி"** பொதுக்கம்பனியின் 2024 ஜனவரி மாதத்தில் கொள்வனவு, விற்பனை செய்யப்பட்ட இருப்பு உருப்படி "$MIX$" உடன் தொடர்பானவையாகும்.

| திகதி | விபரம் | தொகை (அலகுகள்) | அலகு ஒன்றின் விலை (ரூ) |
|---|---|---|---|
| ஜனவரி 01 | ஆரம்ப மீதி | 400 | 22 |
| ஜனவரி 07 | கொள்வனவுகள் | 800 | 25 |
| ஜனவரி 16 | விற்பனைகள் | 900 | ? |
| ஜனவரி 20 | கொள்வனவுகள் | 700 | 28 |
| ஜனவரி 25 | விற்பனைகள் | 500 | ? |
| ஜனவரி 31 | கொள்வனவுகள் | 600 | 29 |

**வேண்டப்படுவது :-**

(1) பின்வரும் ஒவ்வொரு முறையின் அடிப்படையிலும் 2024 ஜனவரி மாதத்திற்கான களஞ்சியப் பேரேட்டினைத் தயாரிக்குக.

(i) முதல் - உள், முதல் - வெளி ($FIFO$) முறை

(ii) நிறையிடப்பட்ட சராசரிக் கிரய ($WAC$) முறை

(2) "மாருதி" பொதுக்கம்பனி $FIFO$ முறையைப் பின்பற்றுமாயின் விற்கப்பட்ட எல்லா அலகுகளும் அலகு ஒன்று ரூ 50 விலையில் விற்பனை செய்யப்பட்டிருப்பின் மொத்த இலாபம் (19 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03) “பலராமன்” என்பது ஒரு தனியுடமை வணிகமாகும். அதன் 31.03.2024 இலுள்ளவாறான நிதிநிலைமைக்கூற்றின் சுருக்கமானது கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா "000" |
|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் (கொண்டு செல் தொகை) | 6500 |
| இருப்பு | 700 |
| வியாபார வருமதிகள் | 940 |
| முற்பணமாக செலுத்தியவை | 560 |
| காசு | 650 |
| மொத்த சொத்துக்கள் | 9350 |
| மூலதனம் | 4000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 1220 |
| வங்கிக்கடன் | 3600 |
| வியாபார கொடுக்குமதிகள் | 200 |
| முற்பணமாக பெற்றவையும் சென்மதி செலவும் | 330 |
| உரிமையாண்மையும் மொத்தப் பொறுப்புக்களும் | 9350 |

**பின்வரும் கொடுக்கல் வாங்கல்களானது 2024 ஏப்ரல் மாதத்தில் வணிகத்தில் இடம் பெற்றுள்ளன.**

(1) ரூ 850000 கிரயமான மீள் விற்பனைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவை தொடர்பில் ரூ 600000 காசு செலுத்தப்பட்டது. மீதித்தொகையானது இரண்டு மாதங்களில் செலுத்தப்பட வேண்டும்.

(2) 2024 ஏப்ரல் மாத வாடகை ரூ 50000 முற்பணமாக செலுத்தியவைகளினுள் உள்ளடங்கியுள்ளது.

(3) இம்மாத ஊழியர்களின் சம்பளம் ரூ 115000 ஆகும். இது தொடர்பில் ரூ 25000 முற்பணமாக செலுத்தியவைகளிலுள் உள்ளடங்கியுள்ளது. அதனை கழித்து மீதித்தொகை இம்மாதம் காசாக செலுத்தப்பட்டது.

(4) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டு செல் தொகையில் ரூ 500000 கிரயமான காணி உள்ளடங்கியுள்ளது. கொண்டு செல் மீதியில் வருடாந்தம் 10% தேய்விடுக.

(5) ரூ 650000 கிரயமான பொருட்கள் ரூ 1300000 இற்கு விற்கப்பட்டது. இது தொடர்பில் ரூ 300000 முற்பணமாக பெற்றவையில் உள்ளடங்கியுள்ளதுடன் மிகுதித் தொகை இம்மாதம் பெறப்பட்டிருந்தது.

(6) முன்னைய மாத காலத்தில் பதிவளிப்புச் செய்யப்பட்டிருந்த வியாபார வருமதியாளன் ஒருவரின் மீதிக்காக ரூ 25000 இம்மாதம் பெறப்பட்டிருந்தது.

(7) உரிமையாளர் ரூ 40000 கிரயமான பொருட்களை எடுப்பனவு செய்திருந்தார்.

(8) 01.04.2024 இல் காணப்பட்ட வியாபார கொடுக்குமதியாளன் மீதிக்கு 10% காசுக்கழிவு பெற்று மிகுதித் தொகை உரிமையாளரின் தனிப்பட்ட பணத்தில் இருந்து தீர்ப்பனவு செய்யப்பட்டது.

(9) ரூ 300000 கிரயமான பொருட்கள் ரூ 500000 பட்டியல் விலையிட்டு கடனுக்கு விற்கப்பட்டிருந்தன. இத்தொகைக்கு 10% வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டது.

(10) ஏப்ரல் மாத வங்கித் தவணைக் கட்டணம் ரூ 130000 செலுத்தப்பட்டது. இதனுள் உள்ளடங்கியுள்ள வட்டி ரூ 30000 ஆகும்.



kalvi.lk

*(11)* கடந்தமாத சென்மதி மின்சாரக் கட்டணம் ரூ 30000 இம்மாதம் செலுத்தப்பட்டதுடன் 2024 ஏப்ரல் மாத ரூ 50000 பெறுமதியான மின்சாரப்பட்டியல் பெறப்பட்டது. இது இம்மாதம் செலுத்தப்படவில்லை.

*(12)* இம்மாதம் ரூ 30000 பெறுமதியான இருப்புக்கள் அழிவடைந்தன.

*(13)* வியாபார வருமதியாளரிடம் இருந்து 5% காசுக்கழிவு அனுமதித்து ரூ 475000 பெறப்பட்டது.

*(14)* வியாபாரக் கழிவு கழித்த பின் ரூ 45000 இற்கு கடனுக்கு விற்கப்பட்ட பொருட்கள் வாடிக்கையாளன் ஒருவரினால் திருப்பியனுப்பப்பட்டன. இவற்றின் கிரயம் ரூ 30000 ஆகும்.

**வேண்டப்படுவது**

(i) 01.04.2024 இலுள்ளவாறான மீதிகளைப் பதிவு செய்வதுடன் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 14 வரைக்கான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினை (பெறுமதியுடன்) காட்டுக. பெறுமதி அதிகரிக்குமாயின் (+) எனவும் பெறுமதி குறைவடையுமாயின் (−) எனவும் அந்தந்தப் பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடுக. (இவ்வினாவிற்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக.ரூ000)

| மீதி கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துக்கள் | | | | | = | பொறுப்புக்கள் + | | உரிமை யாண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | இருப்பு | வியாபார வருமதிகள் | முற்பணமாக செலுத்தியவை | காசு | வங்கிக் கடன் | வியாபாரக் கொடுக்குமதிகள் | முற்பணமாக பெற்றவையும் சென்மதி செலவும் | |
| 01.04.2024 இல் மீதி | | | | | | | | | |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| .......... | | | | | | | | | |
| 30.04.2024 இல் மீதி | | | | | | | | | |

(ii) தேறிய சொத்துக்கள் அடிப்படையைப் பயன்படுத்தி 2024 ஏப்ரல் மாதத்திற்கான இலாபம் அல்லது நட்டம்

(iii) 30.04.2024 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக்கூற்று

(iv) 30.04.2024 இல் நிறுத்தி வைத்த வருவாய்

*(40 புள்ளிகள்)*

*04)* *(அ)* தனியார் கம்பனியான சிவம் *PLC* ஆனது பெறுமதி சேர்வரிக்காக (*VAT*) பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் மீதிகள் 01.01.2024 இலுள்ளவாறு பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டவையாகும்.

| | ரூ(000) |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 750 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 520 |



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

| | |
|---|---|
| $VAT$ கட்டுப்பாட்டுக் கணக்கு (செலவு) | 130 |
| காசு | 250 |

(i) 01.01.2024 இல் காணப்பட்ட வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூ 70000 கழிவு அனுமதித்து மிகுதித் தொகை முழுவதும் பெறப்பட்டது.

(ii) 01.01.2024 இல் காணப்பட்ட வியாபாரக் கடன் கொடுத்தோர் மீதி ரூ 50000 கழிவு பெற்று மிகுதித் தொகை முழுவதும் தீர்ப்பனவு செய்யப்பட்டதுடன் அத்திகதியிலுள்ள $VAT$ கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

(iii) விற்பனை நாளேடு

| வியாபார வருமதியாளர்கள் | (ரூ000) விற்பனைகள் | $VAT$ 12% |
|---|---|---|
| முல்லை | 900 | 108 |
| மருதம் | 1000 | 120 |
| சாருமதி | 600 | 72 |

கொள்வனவு நாளேடு

| வியாபார கொடுக்குமதி யாளர்கள் | (ரூ000) கொள்வனவு | $VAT$ 12% |
|---|---|---|
| நெய்தல் | 700 | 84 |
| சந்தானம் | 500 | 60 |
| குறிஞ்சி | 400 | 48 |

(iv) காசு கொள்வனவுகள் 12 % $VAT$ உடன் ரூ 336000
காசு விற்பனைகள் 12 % $VAT$ உடன் ரூ 896000

(v) முல்லையும், சாருமதியும் உரிய காலத்தினுள் பணம் செலுத்த முன்வந்ததனால் $VAT$ நீங்கலான தொகைக்கு 10% காசுக் கழிவு அனுமதித்து முழுத்தொகையும் பெறப்பட்டது எனினும் மருதம் ரூ 600000 மட்டுமே செலுத்தியிருந்தார்.

(vi) வியாபாரக் கொடுக்குமதியாளருக்கான கொடுப்பனவுகள் வருமாறு

| **வியாபார கொடுக்குமதியாளர்** | **செலுத்திய காசு** (ரூ 000) | **பெற்ற கழிவு** (ரூ 000) |
|---|---|---|
| நெய்தல் | 470 | 30 |
| சந்தானம் | 280 | 20 |
| குறிஞ்சி | 200 | ____ |

(vii) இம்மாத செயற்பாட்டு செலவுகளுக்காக ரூபா 230000 காசு செலுத்தப்பட்டது.

(viii) 01.01.2024 இல் ரூ 600000 மோட்டார் வான் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

**வரைபு இலாபம்**

31.01.2024 இல் முடிவடைந்த ஜனவரி மாதத்திற்கான வரைபு இலாபம் ரூ 795000 ஆக இருந்தது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையில் பின்வரும் வழுக்கள் வெளிப்பட்டன.

(1) இம்மாதம் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்துக்கான வருடாந்த பெறுமானத் தேய்வு 10 % ஆகும். இது சீராக்கப்படவில்லை.

(2) பெற்ற கழிவு, கொடுத்த கழிவு கணக்கு மீதிகள் இலாபக் கணிப்பீட்டிலிருந்து விடுபட்டிருந்தன.

(3) செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள் காசுக் கொடுப்பனவு நாளேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது செயற்பாட்டுச் செலவுகள் கணக்கில் ரூ 320000 ஆகப் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

1) 31.01.2024 இல் முடிவடைந்த ஜனவரி மாதத்திற்கான பின்வரும் மூலப் பதிவேடுகளும், பேரேட்டுக் கணக்குகளும்

(i) காசுப் பெறுவனவு நாளேடு

(ii) காசுக் கொடுப்பனவு நானேடு



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(iii) காசுக்கணக்கு
(iv) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
(v) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
(vi) *VAT* கட்டுப்பாட்டுக் கணக்கு

2) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள் (விளம்பலுடன்)
3) 31.01.2024 இல் முடிவடைந்த ஜனவரி மாதத்திற்கான இலாபத்தைத் திருத்துவதற்கான கூற்று.

(30 புள்ளிகள்)

(ஆ) "*ASP*" சங்கமானது மாணவர் நலன்புரி சார்ந்து ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தின் அங்கத்தவர் ஒருவருக்கான மாதாந்த சந்தா ரூ 500 ஆகும். பின்வரும் தகவல்கள் 31.12.2023 இல் முடிவடையும் வருடத்திற்கான சங்கத்தின் சந்தாவுடன் தொடர்புடையனவாகும்.

**(i) 01.01.2023 இலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 200 ஆக இருந்ததுடன் அவர்களின் சந்தாக் கொடுப்பனவுகளானது பின்வருமாறு இருந்தது.**

(1) 01.01.2023 இலுள்ளவாறு 30 அங்கத்தவர்களின் 04 மாத சந்தா நிலுவையாக இருந்தது. இவர்களில் 20 பேர் இச்சந்தா நிலுவையையும் 2023 ஆம் வருடத்திற்கான சந்தா முழுவதையும் இவ்வருடம் செலுத்தியிருந்தனர் மீதியாகவுள்ள 10 அங்கத்தவர்கள் 2022 ஆம் வருடத்திற்கான நிலுவைச் சந்தாவையும் 2023 ஆம் வருடத்திற்கான சந்தாவையும் செலுத்தவில்லை.
(2) மேலும் 10 அங்கத்தவர்கள் இவ்வருட சந்தா முழுவதையும் செலுத்தவில்லை
(3) 2022 டிசம்பர் மாதத்தில் 40 அங்கத்தவர்கள் 2023 ஆம் வருடத்திற்கான முழுச் சந்தாவையும் செலுத்தியிருந்தனர்.
(4) 2023 டிசம்பர் மாதத்தில் 50 அங்கத்தவர்கள் 2024 ஆம் வருடத்திற்கான முதல் 5 மாத சந்தாவையும் செலுத்தியிருந்தனர்.
(5) ஏனைய அங்கத்தவர்கள் நடைமுறை வருடத்திற்கான சந்தா முழுவதையும் முறையாக செலுத்தியிருந்தனர்.

(ii) **2023 ஆம் வருடத்தில் புதிதாக இணைந்த அங்கத்தவர்களும் அவர்களின் சந்தா கொடுப்பனவுகளும் பின்வருமாறு,**

*01.10.2023 இல் மேலும் 60 அங்கத்தவர்கள் புதிதாக இணைந்து கொண்டனர். இவர்களில் 50 அங்கத்தவர்கள் 3 மாதத்திற்கான சந்தாவையும் முழுமையாக செலுத்தியிருந்தனர். மீதி 10 அங்கத்தவர்கள் 31.12.2023 ஆகும் போது சந்தா எதையும் செலுத்தவில்லை.*

**வேண்டப்படுவது:-**

(1) 01.01.2023 இலுள்ளவாறான வருமதிச்சந்தா
(2) 01.01.2023 இலுள்ளவாறான முற்பண சந்தா
(3) 31.12.2023 இலுள்ளவாறான வருமதிச்சந்தா
(4) 31.12.2023 இலுள்ளவாறான முற்பணச்சந்தா
(5) 2023 ஆம் வருடத்திற்கு இனங்காணப்பட்ட சந்தா வருமானம்
(6) 2023 ஆம் வருடத்தில் காசாக பெற்ற மொத்த சந்தா
(7) 31.12.2023 இல் உள்ளவாறான சொத்துக்களில் அதிகரிப்பு

(10 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

05) **(அ)** அமலன், விமலன், கமலன் ஆகிய மூவரும் பங்குடமையொன்றை நடாத்தி வந்தனர். பங்குடமை உடன்படிக்கையின் ஏற்பாடுகள் பின்வருமாறு இருந்தன.

- அமலன், விமலன், கமலன் ஆகிய மூவரும் இலாப நட்டங்கள் முறையே 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்வர்.
- ஒவ்வொரு பங்காளரும் மாதாந்த சம்பளமாக ரூபா 60,000 இற்கு உரித்துடையவராவர்.
- ஒவ்வொரு பங்காளரும் வருடத்தின் ஆரம்பத்திலுள்ள மூலதன மீதியின் மீது 10% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவர்களாவர்.
- பங்காளர் ஒருவரினால் வழங்கப்படும் கடன்களுக்கு வருடாந்தம் 8% வட்டி பெற உரித்துடையவராவர்.

(1) 01.04.2023 இலுள்ளவாறான பங்காளர்களின் மூலதன, நடைமுறைக்கணக்கு மீதிகள் வருமாறு,

| **பங்காளர்கள்** | **மூலதனக்கணக்கு (ரூ 000)** | **நடைமுறைக்கணக்கு (ரூ 000)** |
|---|---|---|
| அமலன் | 10000 | 1200 |
| விமலன் | 6000 | 1000 |
| கமலன் | 4000 | 600 |

(2) 01.04.2023 பங்காளர் அமலனின் கடன் கணக்கு மீதி ரூ 4000000 ஆக காணப்பட்டது.

(3) 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்கான பங்குடமையின் விற்பனை வருவாய் மற்றும் விற்பனைக்கிரயம் முறையே ரூ32000,000 மற்றும் ரூ18600,000 ஆக இருந்தன.

(4) 31.03.2024இல் முடிவடையும் வருடத்திற்கான பங்குடமையின் செயற்பாட்டுச் செலவுகள் ரூ9740,000 ஆகும். [பெறுமானத்தேய்வு உட்பட]

(5) இவ்வருடத்தில் பங்காளர்களால் பெறப்பட்ட சம்பளங்களும் பற்றிய பொருட்களும் பின்வருமாறு,

| **பங்காளர்கள்** | **பெறப்பட்ட சம்பளங்கள் (ரூ 000)** | **பற்றிய பொருட்கள் கிரயத்தில் (ரூ 000)** |
|---|---|---|
| அமலன் | 600 | 150 |
| விமலன் | 500 | 130 |
| கமலன் | 400 | 120 |

மேற்படி பங்காளருக்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் செயற்பாட்டுச் செலவுகளுள் பதியப்பட்டுள்ளன. பற்றிய பொருட்கள் பதியப்படவில்லை. 31.03.2024 இலுள்ளவாறான இருப்புக்கள் பௌதீக ரீதியாக கணக்கிடப்பட்டன. அவற்றின் கிரயம் ரூபா 2600,000 ஆகவும் அவற்றின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா 2000,000 ஆகவும் காணப்பட்டன.

(6) இவ்வருடத்திற்கான பங்குடமையின் காப்புறுதிக்கட்டுப்பணம் ரூ400,000 பங்காளரான அமலனின் சொந்தப் பணத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இது கணக்கு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(7) விமலன் தனது தனிப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி கொள்வனவு செய்த ரூ800,000 கிரயமான பொருட்களை பங்குடமைக்கு வழங்கியிருந்தார். இப் பொருட்களின் கிரயத்தை பங்காளனின் மூலதனப் பங்களிப்பாக கருதுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் இவை தொடர்பில் கணக்கு ஏடுகளில் எதுவும் பதியப்படவில்லை. எனினும் வழங்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் இவ் வருடத்தில் விற்கப்பட்டிருந்ததுடன் அவை விற்பனை வருவாயாகவும் இனங்காணப்பட்டிருந்தன.



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

*(8) 01-10-2024 இல் அமலனின் கடனில் 50% உம் மீளளித்த கடனுக்கான வட்டி இரண்டும் செலுத்தப்பட்டு செயற்பாட்டு செலவினுள் உள்ளடங்கியுள்ளதுடன் மிகுதிக் கடனுக்கு இவ் வருடம் முழுவதும் செலுத்த வேண்டிய வட்டியானது கணக்கு பதிவுக்குட்பட்டிருக்கவில்லை*

*(9) 31-03-2024 இல் கமலன் பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். இத்திகதியில் அவரின் நன்மதிப்பின் பங்கானது ரூ.1500000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டது. நன்மதிப்பானது மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்படும். கமலன் இளைப்பாறும் போது அவருக்கு செலுத்த வேண்டிய தொகையில் ரூ.3500000 ஆனது இளைப்பாறும் நேரத்தில் செலுத்தப்பட்டதுடன் மிகுதித் தொகையானது கடன் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது. அமலன், விமலன் ஆகியோர் இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து பங்குடமையைத் தொடர்வதெனத் தீர்மானித்துள்ளனர்.*

**வேண்டப்படுவது:-**

*1) 31-03-2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் வருமானக் கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட)*

*2) 31-03-2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் மூலதனக் கணக்குகளும், நடைமுறைக் கணக்குகளும்*

*3) 31-03-2024 இல் கமலனுக்குச் செலுத்த வேண்டிய கடனின் தொகை*

*(25 புள்ளிகள்)*

(ஆ) பின்வரும் தகவல்கள் **“அபி” *PLC*** இன் நிதிக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டவையாகும்.

(i) *31-03-2024 இல் முடிவடையும் வருடத்திற்கானது*

***(ரூ. 000)***

வரிக்கு முன்னரான இலாபம்........................................................ *2100*
வட்டிச் செலவு.............................................................................. *300*
வருமான வரிச் செலவு................................................................. *600*
ஞெலுத்திய பங்கிலாபம்............................................................... *600*

(ii) *01-04-2023 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள்*................ *3500*

(iii) ***31-03-2024 இல் உள்ளவாறான***

***(ரூ. 000)***

கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் ............................*4500*
(ஒவ்வொன்றும் ரூ.30 படியானது)
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ...................................................................*3100*
நீண்டகால கடன் ...........................................................................*3000*
நடைமுறைப் பொறுப்புக்கள்.........................................................*3000*
நிறுத்தி வைத்த வருவாய்கள் .......................................................*?*



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(iv) 31-03-2023 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட சில விகிதங்கள் வருமாறு

- உரிமையாண்மை மீதான வருவாய் விகிதம் - 12%
- மொத்தச் சொத்துக்கள் மீதான வருவாய் விகிதம் - 9%
- கடன்மூலதன விகிதம் - 15%
- வட்டிக் காப்பு விகிதம் - 9 தடவைகள்
- பங்கொன்றுக்கான உழைப்பு - ரூ.12
- பங்கொன்றுக்கான பங்குலாபம் - ரூ.3

**வேண்டப்படுவது:-**

***(1) 31-03-2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் விகிதங்கள்***

(i) உரிமையாண்மை மீதான வருவாய் விகிதம்

(ii) மொத்தச் சொத்துக்கள் மீதான வருவாய் விகிதம்

(iii) கடன் மூலதன விகிதம்

(iv) பங்கொன்றுக்கான உழைப்பு

(v) பங்கொன்றுக்கான பங்குலாபம்

**(2)** மேற்படி கணிக்கப்பட்ட விகிதங்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது சாதகமானதா? அல்லது பாதகமானதா? எனக் குறிப்பிடுக.

(15 புள்ளிகள்)

[மொத்தம் 40 புள்ளிகள்]

06)

(அ) சாரங்கள் PLC இன் 31-03-2024 மற்றும் 31-03-2023 இலுள்ளவாறான சுருக்கிய நிதி நிலைமைக் கூற்றுக்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **31-03-2024 இல்(ரூ.000)** | **31-03-2023 இல்(ரூ.000)** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (கொண்டு செல் தொகை) | 24500 | 18500 |
| சொத்துப் பாவனை உரிமை | 12000 | ____ |
| 5 வருட நிலையான வைப்பு | 6000 | 6000 |
| இருப்புக்கள் | 4600 | 3500 |
| வியாபார வருமதிகள் | 2700 | 4100 |
| முற்பணமாக செலுத்திய செயற்பாட்டு செலவுகள் | 900 | 300 |
| வருமதி நிலையான வைப்பு வட்டி | 500 | 600 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 3800 | 2000 |
| | 55000 | 35000 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

| | | |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 25500 | 21500 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 4000 | 1750 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 4000 | 2250 |
| வங்கி கடன் | 9200 | 7500 |
| குத்தகைப் பொறுப்பு | 10000 | - |
| வியாபார கொடுக்குமதிகள் | 800 | 950 |
| சென்மதி வட்டிச் செலவு | 250 | 150 |
| சென்மதி செயற்பாட்டுச் செலவுகள் | 700 | 550 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 550 | 350 |
| | 55000 | 35000 |

**31-03-2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான மேலதிக தகவல்கள் வருமாறு**

(1) கம்பனியானது இவ்வருடத்தில் ரூ.500000 இடைக்காலப் பங்குலாபமாக செலுத்தியுள்ளதுடன் ரூ.1000000 நிறுத்தி வைத்த வருவாயில் மூலதனமாக்கியும் பொது மக்களுக்கு பொதுப் பங்கு வழங்கலையும் மேற்கொண்டு அவற்றுக்கான முழுப் பணத்தையும் பெற்றுக் கொண்டது

(2) இவ் வருடத்திற்கான பெறுமானத் தேய்வு ரூ.3450000 மற்றும் வருமான வரிச்செலவு ரூ.1750000 உம் ஆகும்.

(3) இவ் வருடத்தில் கம்பனியின் காணியானது முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்து மிகை ஏற்பட்டதுடன் வேறு எந்த சொத்துக்களும் மீள்மதிப்பிடவில்லை

(4) இவ் வருடத்தில் ரூ.6000000 கிரயமானதும் ரூ.3200000 திரண்ட தேய்வினைக் கொண்டதுமான மோட்டார் வான் ஒன்று ரூ.650000 ஆதாயத்தில் காசுக்கு விற்று அகற்றப்பட்டதுடன் புதிய கட்டடம் ஒன்றும் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது

(5) இவ் வருடத்தில் மேலும் வங்கிகடன் பெறப்பட்டதுடன் வங்கி கடனுக்கான தவணைக் கட்டணம் ரூ.1100000 செலுத்தப்பட்டிருந்ததுடன் இத்தவணைக் கட்டணத்திலுள்ளடங்கியுள்ள வட்டி ரூ.30000 ஆகும்.

(6) 31-03-2024 இல் மோட்டார் வாகனம் ஒன்று 5 வருடம் பயன்படுத்தும் உரிமையை பெற்று குத்தகை உடன்படிக்கையில் கொள்வனவு செய்யப்பட்டு ஆரம்பக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதி குத்தகை பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது.

(7) கடந்த வருடம் வருமதியான நிலையான வைப்பு வட்டியானது இவ்வருடம் காசாக பெறப்பட்டிருந்தது

**வேண்டப்படுவது:-**

(1) $LKAS-7$(காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி **சாரங்கன் PLC** இன் 31-03-2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

(25 புள்ளிகள்)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**(ஆ) சிறுவர்களுக்கான** ஆடைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் "நியூ" உற்பத்தி விற்பனை **வணிகம் ஒன்றின்** *2024* ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் வருமாறு-

*01-01-2024* இல் துணிகளின் இருப்பு = *50* மீற்றர்
*31-01-2024* இல் துணிகளின் இருப்பு = *35* மீற்றர்
கொள்வனவு செய்யப்பட்ட துணிகள் = *500* மீற்றர்
ஒரு மீற்றர் துணியின் விலை = ரூ.*1400*
(ஆடை) சட்டை ஒன்றுக்கான தையல் கூலி = ரூ.*1500*
(ஆடை) சட்டை ஒன்றுக்கான இறைக் கொடுப்பனவு = ரூ.*300*
(ஆடை) சட்டை ஒன்று தைப்பதற்கு தேவைப்படும் துணி = *2* மீற்றர்
உற்பத்தி மேந்தலைக் கிரயம் = ரூ. *250000*

**மேலதிக தகவல்கள்**

- *2024* ஜனவரி மாத தொடக்கம், மற்றும் முடிவில் நடைமுறை வேலை இருப்பு எதுவும் காணப்படவில்லை
- உற்பத்தி கிரயத்தில் 25% மொத்த இலாபம் வைத்து விற்பனை விலை தீர்மானிக்கப்படுகிறது.
- ஜனவரி மாதம் *15m* துணிகள் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன.

**வேண்டப்படுவது :-**

1) (1) *31-01-2024* இல் முடிவடைந்த ஜனவரி மாதத்திற்கான உற்பத்தி கிரயக்கூற்று

2) அலகு ஒன்றின் (ஒரு சட்டையின்) விற்பனை விலை

3) *2024* ஜனவரி மாதம் உற்பத்தி செய்த சட்டைகளில் *50* சட்டைகள் *31-01-2024* வரை விற்கப்பட்டிருக்கவில்லை எனின் $LKAS-2$ இருப்புக்கள் இன்படி *31-01-2024* இல் உள்ளவாறான இருப்பின் கிரயம்

(15 புள்ளிகள்)

[மொத்தம் 40 புள்ளிகள்]



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page